# வடக்கு மாகாண பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஆளணியின் கீழ் ஒப்பந்த அடிப்படையிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிலுனர் நியமனங்களை மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2018

1. வடக்கு மாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஆளணியின் கீழ் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிலுனர் நியமனங்களை மேற்கொள்வதற்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 22.03.2018 ஆகும்

## 2. சேவை நிபந்தனைகள்

2.1 இவ் ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் 5 மாதங்களுக்கு மேற்படாத சேவைக்காலத்தினை கொண்டதாக வழங்கப்படுவதுடன் குறித்த கால முடிவில் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும்.

2.2 எனினும் சேவைக்கான தேவை தொடர்ந்தும் காணப்படுமிடத்து பயிலுனரின் சேவை திருப்திகரமாக அமையும் பட்சத்தில் மீண்டும் மீண்டும் 5 மாத காலப்பகுதிகளுக்கு புதிய ஒப்பந்தங்கள் வழங்கப்படலாம்.

2.3 பயிலுனரின் வரவு, நடத்தை சேவை என்பன திருப்தியற்றதாக காணப்படுமிடத்து குறுகிய கால முன்னறிவித்தலுடன் சேவை முடிவுறுத்தப்படலாம்.

2.4 இந்நியமனமானது தற்காலிகமானதொன்றாகும் என்பதுடன் நியமனம் பெறும் ஒருவர் எந்நியமத்தின் கீழும் நிரந்தர நியமனம் கோருவதற்கு உரித்தற்றவர் ஆவார்.

2.5 இந்நியமனம் பெறுவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்ற தயாராகவிருத்தல் வேண்டும் (குறிப்பாக யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சேவையாற்றுவதற்கான தேவைப்பாடே காணப்படுகின்றது).

## 3. பொது தகைமைகள்

3.1 விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3.3 சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

3.4 விண்ணப்பதாரி / பெற்றோர் வடக்கு மாகாணத்தினை பிறப்பிடமாக கொண்டவர்களாகவோ அல்லது விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தினை நிரந்தர வதிவிடமாகவோ கொண்டவராகவோ இருத்தல் வேண்டும்.

## 4. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்

4.1 கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்

க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் மொழி (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்), கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன்

க.பொ.த (உ/த) ப் பரீட்சையில் கணிதப் பாடநெறியில் தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் அத்துடன் பௌதீகவியல் ஆகிய பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன்

4.2 கீழ் தரப்பட்டுள்ள கல்வி நிறுவனங்களில் கல்விகற்று குறித்த கற்கை சான்றிதழை பெற்றுக்கொண்டவர்களும், இறுதிப்பரீட்சைக்கு தோற்றி பரீட்சைபெறுபேறுகளிற்காக காத்திருப்போரும், கீழ்த்தரப்பட்ட கல்வி நிறுவனங்களிற்குள் வார இறுதி நாட்களில் மட்டும் பயிலுனர்களாக உள்ளவர்களும் இப்பதவிக்கு தொழில்சார் தகைமை கொண்டவர்களாக கருதப்படுவார்கள்.

(1) மொரட்டுவ பல்கலைக் கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்

அல்லது

(2) தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்

அல்லது

(3) கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்

அல்லது

(4) அங்கீகரிக்கப்பட்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (சிவில்) சான்றிதழ்

அல்லது

(5) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் (IESL) நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையில் முதலாம் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(6) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) துறை தொடர்பான தேசிய தொழில்த் தகைமை (NVQ) மட்டம் 6 இனை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(7) மூன்றாம்நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (சிவில்) (NCT -Civil)

அல்லது

(8) கல்வி உயர்கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் சான்றிதழ்களை வெளியிடுகின்ற நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேற்படி தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு சகல வகையிலும் சமமானவையென மூன்றாம் நிலை தொழில்க் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கபடுகின்ற வேறு தகைமைகள்.

**5. ஆட்சேர்ப்பு முறை**

5.1 விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு கோரப்பட்ட தகைமை உடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

5.2 நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரியின் நியமன தகைமைக்கான ஆவணங்கள் பரீட்சிக்கப்படுவதுடன் தொழில்நுட்பம் தொடர்பான விண்ணப்பதாரியின் அறிவும் பரீட்சிக்கப்படும்.

5.3 விண்ணப்பதாரி நியமனதகைமைகளையும் எதிர்பார்க்கப்படும் தொழில்நுட்ப அறிவினையும் கொண்டவராக காணப்படுமிடத்து கீழ் குறிப்பிடப்படும் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

- பந்தி 4.2இன் கீழ்தரப்பட்டுள்ள தொழில்சார் கல்வி நிறுவனங்களில் கல்விகற்று குறித்த கற்கைசான்றிதழை பெற்றுக்கொண்டவர்கள்
- பந்தி 4.2இன் கீழ்தரப்பட்டுள்ள தொழில்சார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்று இறுதிப்பரீட்சைக்கு தோற்றி பரீட்சை பெறுபேறுகளிற்காக காத்திருப்பவர்கள்
- பந்தி 4.2இன் கீழ்தரப்பட்டுள்ள தொழில்சார் கல்வி நிறுவனங்களில் வார இறுதி நாட்களில் மட்டும் பயிலுனர்களாக உள்ளவர்கள்

5.4 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றுமாறு பணிக்கப்படலாம்.

**6. விண்ணப்பிக்கும் முறை**

இது தொடர்பில் மேலதிக விபரங்களையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தினையும் வடக்கு மாகாண சபையின் வலைத்தளமான www.np.gov.lk என்ற முகவரியில் Recruitment & Exam என்ற பிரிவினுள் உள்ளடங்கும் Advertisement என்பதனை அழுத்தி - 2018 என்ற இணைப்பினை மீண்டும் அழுத்துவதன் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்யலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 22.03.2018 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியவாறு ***பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், வடமாகாணம், மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்*** என்ற முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வடக்குமாகாண பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஆளணியின் கீழ் ஒப்பந்த அடிப்படை தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிலுனர் நியமனங்களை மேற்கொள்வதற்கான விண்ணப்பம் - 2018'' என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**7. சம்பள அளவுத்திட்டம்**

சகல படிகளும் உள்ளடங்கலாக திரட்டிய மாதாந்த படியாக ரூபா. 30,000.00 வழங்கப்படும் இந்நியமனம் ஊழியர் சேமலாபநிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய (ETF) கடப்பாட்டினை கொண்டது. கடமைநாள்களில் பெற்றுக்கொள்ளப்படும் விடுமுறைகளுக்கெதிராக நாளொன்றுக்கு ரூபா. 1000.00 என்றவாறாக கழிப்பனவு மேற்கொள்ளப்படும் என்பதுடன் பொது விடுமுறை மற்றும் வாரஇறுதி நாட்களில் பணிபுரியுமாறு வேண்டப்படுமிடத்து அதற்காக பதில்விடுமுறை அனுமதிக்கப்படும்.

**அ. பத்திநாதன்,**
பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம்,